

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள கொளத்தூர் சட்டமன்ற தொகுதி பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் நவீன அங்காடி (Kolathur Modern Market) இறுதிக் கட்டப் பணிகளை நேற்று (05.03.2026) அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியில் எண்ணூர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான

# எண்ணூர் கத்திவாக்கம் பேருந்து நிலையம் - கலைஞர் நூற்றாண்டு நூலகம் - துணை முதல்வர் திறந்து வைத்தார்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – மாதவரம் சுதர்சனம் – மேயர் பிரியா – கே.பி.சங்கர் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 6-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினரான கே.பி.சங்கர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் சி.பி.சி.எல். நிறுவனத்தின் சி.எஸ்.ஆர். நிதியிலிருந்து 45 லட்சம் ரூபாய் நமக்கு நாமே திட்ட பங்களிப்பு என ரூபாய் 4.63 கோடி செலவில் கட்டப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எண்ணூர் கத்திவாக்கம் பேருந்து நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.02.2026 தனது திருக்கரத்தால் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

60 ஆண்டு கால எண்ணூர் பகுதி மாணவர்களின் நீண்ட நாள் கனவாக இருந்த எண்ணூர் கத்திவாக்கம் நூலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியில் திருவொற்றி யூர் சட்டமன்ற உறுப்பினரான கே.பி.சங்கர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.1.25 கோடி செலவில் மற்றும் பிற நிறுவனத்தின் சிஎஸ்ஆர் நிதியிலிருந்து ரூ.1.50 கோடி என ரூபாய் 2.75 கோடி செலவில் கட்டப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எண்ணூர் கத்திவாக்கம் கலைஞர் நவீன நூலகத்தை மாண்புமிகு இளந்தலைவர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று தனது திருக்கரத் தால் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

பகுதி நேர நூலகமாக செயல்பட்டு வரும் இந்நூலகத்தை முழுநேர நூலகமாக செயல்பட உதவிட வேண்டும் என்று வாசகர்கள் சார்பாக திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் கோரிக்கை வைத்தார். எண்ணூர் கத்திவாக்கம் பகுதியில் மிகவும் சிதிலமடைந்த நிலையில் இருந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்று சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்த நிலையில் தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியில் சென்னை மாநகராட்சி NUHM நிதியிலிருந்து ரூ.1.00 கோடி செலவில் தரைத்தளமும், VCVP நிதியிலிருந்து ரூ.2.00 கோடி செலவில் 20 படுக்கை வசதி கொண்ட முதல் தளம் என ரூ.3.00 கோடி செலவில் கட்டப்பட்ட திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எண்ணூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்று தனது திருக்கரத் தால் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

மகப்பேறு மருத்துவமனையாக ஆரம்ப காலத்தில் செயல்பட்டு வந்தது போல் மீண்டும் இந்த நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மகப்பேறு மருத்துவமனையாக செயல்படுத்த ஆவன செய்ய உதவிட வேண்டும் என்று பகுதி மக்களின் சார்பாக கோரிக்கை வைத்தோம்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம், MLA, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சென்னை மாநகர ஆணையர் குமரகுருபரன், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு, திருவொற்றியூர் பகுதி கழக செயலாளர் வை.ம. அருள்தாசன், 2 வது வட்ட மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ் குமார், 2 வது வட்ட கழக செயலாளர் சேகர் மற்றும் கழக தோழர்கள் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

### ஒன்றியச் செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் - முதல்வர் பிறந்தநாள் விழா!

# சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் – திண்டுக்கல் ஐ.லியோனி – கே.பி.சங்கர் – டாக்டர் ஜெ.அருண் சிறப்புரை!

சென்னை மார்ச் 6-

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (6.3.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் சோழவரம் பஜார் வீதியில் நடைபெறுகிறது.

விழாவிற்கு எஸ்.பிரபாகரன், சுகவேணி முருகன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

வழுதிகை நா.செல்வசேகரன், ஏ.காசிம் முஹம்மது, கே.எம்.துரைவேல், ப.சீனிவாசன், கி. வீரம்மாள், செ.அரசு, இரா.விஜயன், பா.சேகர், பொன். கோதண்டன் உள்ளிட்ட பலர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவிற்கு சோழவரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளரும் சோழவரம் ஒன்றிய துணைப் பெருந் தலைவருமான மீ.வே. கர்ணாகரன் தலைமை வைக்கிறார்.

இவ்விழாவில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., மாதவரம் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஜெ.அருண் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இவ்விழாவில் வீ.கண்ணதாசன், வீ.கவிகணேசன், ஜி.சந்திர போஸ், ஆர்.பத்மநாபன், பா.மதிவாணன், வி.இராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகி, எம்.ஆனந்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெய் மதன், டி.ஏ.ராஜி, இரா. முருகேசன், பி.சாந்தி, எஸ். நந்தகோபால், ஜி.துக்காராம், புழல் எம்.நாராயணன், ஜி.தயாளன், சி.அற்புதராஜ், ஜி.ராஜேந்திரன், ஐ.ஜான், என்.முகிலன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், சோழவரம் தெற்கு ஒன்றிய ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக எம். ஜெகன், ஏ.கே.கௌதம், ஆர்.குமரன், என்.விஜய், ஆர். சி.சிவ சங்கரன், ஜெ. மைக்டைசன், கே.கவியரசு, க.பிரபு, எஸ்.பார்த்திபன், கே.பாலாஜி, எம்.எஸ். மணிகண்டன், ஆர். ரூபேஷ், எஸ். முத்துக்குமார், ஆர். தினேஷ்குமார், எஸ். திவாஸ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தாம்பரம் மாநகராட்சி 4, ஆவது மண்டலம் 53,வது வார்டு மேற்கு தாம்பரம் டி.டி.கே நகரில் தமிழ்நாடு முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்கம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தனர். அதை தொடர்ந்து மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.



கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 110 அ வட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் இளம் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட புதிய இளைஞர் அணி மன்றத்தை சேர்ந்த இளைஞர் அணி தோழர்கள் ஏற்பாட்டில் கழக இருவண்ண கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வழக்கறிஞர் ப.பிரகாஷ், த.குணசேகர், சீனிவாசன், என்.மோகன் வேல், சிவசிதம்பரம், புஷ்பா நகர் என்.பழனி, லோகநாதன், அருள்ராஜ், சுரேஷ், வாஞ்சிநாதன், சஞ்சய் சுதாகர், வினோத் மற்றும் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சோழிங்கநல்லூர் தொகுதிக்குபட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ல் உள்ளடங்கிய வார்டு எண் 200 செம்மஞ்சேரி பகுதி பொது மக்களின் நீண்ட நெடுநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் எம்எல்ஏ அவர்களின் 2023–24 மற்றும் 2024–2025 ஆம் ஆண்டு நிதியிலிருந்து ரூபாய் (1,கோடி) மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயநலக் கூட்டத்தை தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், ச.அரவிந்த ரமேஷ் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இந்நிகழ்வில், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி செயலாளர்/15 வது மண்டலக்குழு தலைவர் வி.இ. மதியழகன், மாமன்ற உறுப்பினர் ஏ.முருகேசன், வட்ட செயலாளர் ஆர்.நாகராஜ்,மற்றும் டி.தனசேகர், கே.டி. ரவி எஸ்.பி. ஹரி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.

### சைதை கிழக்கு பகுதி – மாவட்ட பிரதிநிதி

# டி.பி.நரசிம்மன்- உஷாநந்தினி இல்ல மணவிழா!

## அமைச்சர் மா சுப்பிரமணியன்– கழக முன்னணியினர் வாழ்த்து!

சென்னை மார்ச் 6-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதி டி.பி.நரசிம்மன் - - வி.உஷா நந்தினி ஆகியோரின் இல்ல மணவிழா (8.3.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 7 மணி அளவில்



பல்லாவரம் கண்டோன்மெண்ட் திருமண மண்டபத்தில் காலை 7 மணி அளவில் நடைபெறுகிறது. முன்னதாக ஏழாம் தேதி சனிக்கிழமை மாலை வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மணவிழா நிகழ்ச்சிக்கு பகுதிச் செயலாளர் இரா. துரைராஜ் தலைமை வகிக்கிறார். எம்.கிருஷ்ணமூர்த்தி, தா.மோகன்குமார், நா.ராதாகிருஷ்ணன், சை.மு.சேகர் முன்னிலை வகிக்கின்றனர். சா.சேகர், ஆர்.பி.மூர்த்தி, இரா.பால்ராஜ், காளீஸ்வரன், இ.தனசேகரன், எம்.ராஜி, எஸ். அறிவானந்தம், எஸ்.தேவி, கு.வீராசாமி ,கே.ராஜாராம், ஆர்.குப்பன், கு.மோகன், ராஜ்குமார், முகவை ரத்தினம், ருத்ர கோட்டி உள்ளிட்டோர் வரவேற்கின்றனர்.

மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரும் மாவட்ட செயலாளருமான மா சுப்பிரமணியன் மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ் அரவிந்த ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், எஸ் குணசேகரன், மின்னல் கந்தப்பன், வழக்கறிஞர் எம் ஸ்ரீதரன், சைதை அன்பரசன், களக்காடு எல்லப்பன் மற்றும் சைதை கிழக்கு மேற்கு பகுதி கழகச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் கழக முன்னோடிகள்

168 ஆவது வட்ட நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஆர்.செல்வம், ஆர்.விமலநாதன் உள்ளிட்டோர் நன்றி கூறுகின்றனர்.

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் ம.கிரண் ஏற்பாட்டில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில்

# கலைஞர் நூலகம் திறப்பு - முதல்வர் பிறந்தநாள் - நலத்திட்ட உதவிகள்!

## ஆ.ராசா எம்.பி– அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் – எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. நூலகத்தை திறந்து வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்! வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ பங்கேற்பு!

திருவள்ளூர் மார்ச் 06;-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திமுக இளைஞரணி சார்பில் திருத்தணி சட்டமன்றத் தொகுதி கலைஞர் நூலகம் திறப்பு விழா மற்றும் கழகத் தலைவர் தமிழ்நாட்டின் முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா மாவட்ட அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் நடைபெறுகிறது

மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ் சந்திரன் எம். எல் .ஏ தலைமை வகிக்கிறார் மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக்- பிரபு கஜேந்திரன், முன்னிலை வகிக்கிறார்கள் திருத்தணி நகரச் செயலாளர் வி.வினோத் குமார், நகர் மன்ற தலைவர் சரஸ்வதி பூபதி, ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள் இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆர். இராசா எம்பி சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்பி, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு நூலகத்தை திறந்து வைத்து நலத்திட்டங்கள் வழங்குகிறார்கள் இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அமைத்தலைவர் கே.திராவிடபக்தன், தொகுதி பார்வையாளர்கள் சண்முகநாதன், மாஸ்டர் சேகர், மாநில நிர்வாகிகள் ஆர். டி.இ.ஆதிசேஷன், இ. குருதாஸ் , ஒ.ஏ. நாகலிங்கம், மாவட்ட நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர். குமரன், சி.ஜெயபாரதி, உதயமலர்பாண்டியன் , மிதுன் சக்கரவர்த்தி , ப. சிட்டிபாபு, வி.கிஷோர், கே.எம்.சுப்பிரமணி, ராஜேஸ்வரி ரவீந்திரநாத் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் சி.ஜே.சீனிவாசன் ஜி.ரவீந்திரா , பி.டி.சந்திரன் சி.என்.சண்முகம் பெ.பழனி, என்.கே. கிருஷ்ணன், கே.ராஜேந்திரன், சி.ஜெ.செந்தில்குமார், டி.ஆர்.கே.பாபு, கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மாகலிங்கம், சி.சு. ரவிச்சந்திரன், மோ. ரமேஷ், க.அரிகிருஷ்ணன் தா.மோதிலால், ஏ.பிரகாஷ் ஞான ஒளி , பா.ஆர்த்தி ரவி, ஏ.எல். விஜயகுமார் பா.சம்பத், மா.ரகு மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள் மாவட்ட அமைப்பாளர் ம. கிரண், துணை அமைப்பாளர்கள் டி.எம். சுகுமார், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார், டி.ஆர்.திலீபன், ஆர். இராஜா நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறார்கள் .



முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு மனநலம் குன்றிய மாற்றுத் திறனாளிகள் விநாயகபுரம் சமர்ப்பணம் இல்ல மாணவர்களுடன் கேக் வெட்டி மதிய உணவு வழங்கி நலத்திட்ட உதவிகளை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் கொண்டாடினார். உடன் வட்டக் கழக செயலாளர் டி.சுந்தரம், எம்.சரவணன், மாமன்ற உறுப்பினர் காசிநாதன், உமா மகேஸ்வரி, பரமேஸ்வரி, மோகனா, பிரியா வெங்கட்ராமன், கருணாநிதி செண்பகராஜ், விக்னேஷ், வெற்றிவேல், வெங்கடேசன், டிவிஎஸ் கோபி, கே.நரேந்திரன், வேலுச்சாமி, உதயா, தேவராஜ், பாஸ்கர் போட்டோ, கவின் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், ஆரம்பாக்கம் ஊராட்சி, முத்தியால்ரெட்டிகண்டிகை பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புதிய பகுதிநேர நியாய விலைக்கடையை டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். உடன் மு.மணிபாலன், கா.சு. ஜெகதீசன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், மு.பாஸ்கரன், டி.மணி, கே.ஆறுமுகம், மு.கேசவன், எஸ்.ராமஜெயம், டி.மஸ்தான், ஆ.மனோகரன், கே.வி.நாகராஜ், இப்ராஹீம், பா.பரத்குமார், அப்பாஸ், ராஜேந்திரன், ரவி, ரவிந்திரன், கே.சி.ராஜா, ஏழுமலை, மஸ்தான், கம்சன், மு.வாசு, மதியகழன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மாதவரம் 26வது வட்டக் கழக சார்பாக மேட்டுமா நகரில். தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 73–வது பிறந்தநாள் முன்னிட்டு கழக கொடி ஏற்றி 500 பேருக்கு மாதவரம் சேர்மன் எஸ் நந்தகோபால் உணவு வழங்கினார். உடன் வட்டக் கழகச் செயலாளர் இ.ராஜேஷ் மாதவரம் லோ.ந.மதி வட்ட துணைச் செயலாளர் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்